[3rd February 1966

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதற்கு ரயில் வசதி தேவையில்லை. அங்கேயே ஸ்மெல்ட்டர் போட்டு எடுத்துக்கொள்ளலாம். அங்கே ரயில் வேண்டும் என்பதற்கு இந்தக் காரணத்தைக் காட்ட வேண்டியதில்லை. வேறு ஏதாவது காரணம் காட்டிக் கொள்ளலாம்.

* 68 **கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

மாமண்டூரில் (கள்ளக்குறிச்சி தாலுக்கா) 10 லட்சம் டன் Zinc கிடைக்கும் என்கிற ஆராய்ச்சியின் முடிவு என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : A reliable assessment of the multi-mineral deposit of copper, lead and zinc located near Mamandur village can be had only after a more intensive survey and prospecting is done.

சிவகங்கையில் நூற்பு ஆலை

* 69 **கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிவகெங்கையில் ஆரம்பிக்க இருக்கும் நூற்பு ஆலை எந்நிலையிலுள்ளது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : லைசென்ஸ்தார் அந்த நூற்பு ஆலையை நிறுவுவதற்கான முயற்சிகள் எடுத்து வருகிறார்.

திருமதி அ. கிருஷ்ணவேணி : கனம் சபாநாயகர் அவர்களே, என்னுடைய ஆண்டிப்பட்டி தொகுதியைச் சேர்ந்த வருசநாட்டு ஏரியாவில் ஏராளமான பருத்தி சாகுபடி செய்கிறார்கள். சாகுபடியாகக் கூடிய பருத்திகள் எல்லாம் வெளியூர்களுக்கு ஏற்றுமதியாகிச் செல்லுகிறது. மேற்படி வட்டாரத்தில் உள்ள ஏழை மக்கள் பொருளாதாரத் துறையில் மிகவும் பின் அடைந்திருக்கிறார்கள். மேலும் ஆண்டிப்பட்டியில் ஒரு கூட்டுறவு ஆலை கட்டுவதற்குப் பங்குத் தொகை கொடுக்கவும் தயாராக இருக்கிறார்கள். ஆகையால் தயவு செய்து இந்த ஆண்டு ஆண்டிப்பட்டியில் ஒரு கூட்டுறவு நூற்பு ஆலை ஏற்படுத்த அமைச்சர் அவர்களுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நம்முடைய ராஜ்யத்தில் இப்போது அமைக்கப்பட்டிருக்கிற மில்களுக்கு போதிய பருத்தி நம் ராஜ்யத்திலேயே உற்பத்தி ஆவதில்லை. வெளி ராஜ்யங்களிலிருந்து கொண்டு வருகிறோம். ஆண்டிப்பட்டிக்கு ஒரு மில் வேண்டுமென்று சொன்னால், அதைப் பற்றித் தனியாக எழுதி அனுப்பினால், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏதாவது வழி இருக்கிறதா என்று பரிசீலனை செய்ய முடியும்.

3rd February 1966]

திரு. செ. மாதவன் : இது சிவகங்கையில் ஆரம்பிக்கக் கூடிய நூற்பு ஆலேயா? அதற்குப் பக்கத்தில் சோழபுரத்தில் ஆரம்பிக்க லைசென்ஸ் கொடுக்கப்பட்டு ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறதே, அந்த தாமதத்திற்கு என்ன காரணம்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கடந்த ஒரு வருஷமாக நிதி நிலே ரொம்ப மோசமாக இருக்கிறது. அதனுல் பலர், லைசென்ஸ் வாங்கியவர்கள் வேண்டிய மூலதனம், பங்குத் தொகை எல்லாம் வசூல் செய்ய முடியாத நிலேயில் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறுர்கள்.

திரு. செ. மாதவன் : இந்த லைசென்ஸைப் பெற்றவர் அந்த இடத்தில் நூற்பு ஆலே வைக்கக் கூடிய வசதி இல்லே, வேறு இடத்தில் வைக்கிறேன் என்று சொல்லி, திருப்பத்தூர் தாலுகாவைக் குறிப்பிட்டிருக்கிறுர். அந்த இடத்தில் வசதி இல்லே என்ருல், அதை திருப்பத்தூர் தாலுகாவிற்கு மாற்ற உத்தேசம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த இடங்களேயெல்லாம் எது பின் தங்கிய பகுதி என்றெல்லாம் ஆராய்ந்து மத்திய சர்க்காரிடம் சிபாரிசு செய்து லைசென்ஸ் வாங்கப்பட்டது. இடத்தை மாற்றுவது அவ்வளவு சுலபம் அல்ல, சரியும் அல்ல.

திரு. ம. கமலநாதன் : தலேவர் அவர்களே, மிகப் பின் தங்கிய பகுதி என்றுதான் ஹோசூரில் நூற்பு ஆலேக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டது. ஆனுல் அந்த ஆலேயை ஆத்தூருக்கு அருகில் ஆரம்பிப்பதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறுர்கள். ஆத்தூரில் இல்லாமல் ஹோசூரில் ஆரம்பிக்க ஏற்பாடு செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஹோசூரும் பின் தங்கிய பகுதி, ஆத்தூரும் பின் தங்கிய பகுதிதான், சாதாரணமாக கடந்த ஒரு ஆண்டுக்கு மேலாகப் பணம் வசூல் செய்ய முடியாத காரணத்திஞல்தான் எல்லாம் தடைபட்டுக்கொண்டிருக்கின்றன. ஹோசூருக்கும் ஏதாவது செய்ய வேண்டுமென்று அதையும் மனதில் வைத்துக்கொண்டு அதற்கான திட்டம் போட உத்தேசித்திருக்கிறேம்.

புலவர் கா. கோவிந்தன் : தலேவர் அவர்களே, இரண்டு நாட்கள் முன்பு நூற்பு ஆலேகளில் நூல்கள் தேங்கியிருப்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் பதில் அளித்திருக்கிறுர்கள். இந்த மில்களில் உற்பத்தி ஆகும் நூல்கள் வெளி நாடுகளிலும் உள்நாட்டிலும் விலே போகும்படியாக அவைகளேத் தயார் செய்ய ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : வெளிநாடுகளில் விலே போக நம்முடைய நூல் தரம் குறைவாக இல்லே. ஆனுல் விலேதான் அதிகமாக இருக்கிறது. நம்முடைய யந்திரங்கள், பருத்தி எல்லாம் உலகத்தில் இருக்கிற விலேயை விட சற்று அதிகமாக இருக்கிறது. அதனுல்தான் நூல் விலே அதிகமாக இருக்கிறது. வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியவில்லே.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் தலைவர் அவர்களே, நூற்பு ஆலைகளுக்கு அனுமதி வழங்கும்போது, குறிப்பிட்ட கால வரைக்குள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற நிபந்தனை போடப் படுகின்றதா? அந்த காலவரை வரைக்கும் ஆரம்பிக்கப்படாத நிலையில் எடுக்கப்படுகின்ற நடவடிக்கை என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : லைசென்ஸ் கொடுக்கும் போது ஓர் ஆண்டுக்குள் வேண்டிய ஆரம்ப நடவடிக்கைகள் எடுத்து, அவ்வாறு எடுத்ததாக அத்தாட்சி காட்டவேண்டுமென்று விதிகள் இருக்கின்றன. அவ்வாறு செய்ய முடியவில்லை என்றால், இந்த ராஜ்ய சர்க்கார் ரத்து செய்ய சிபாரிசு செய்வது கிடையாது. நம் ராஜ்யத்திற்கு வந்த லைசென்ஸை எப்படியாவது நிறைவேற்ற வேண்டுமென்று அவர்களுக்கு அவகாசமெல்லாம் கொடுத்துத்தான் நிறைவேற்றி வருகிறோம்.

திரு. கே. பி. பழனிசாமி : நமது ராஜ்யத்தில் நடக்கக் கூடிய கூட்டுறவு மில்களில் எத்தனை லாபகரமாக இருக்கின்றன? எத்தனை நஷ்டத்தில் இருக்கின்றன? என்று கணக்கு எடுக்கப்பட்டிருக் கிறதா? அப்படியானால் அவை எவ்வளவு என்று கூற முடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எல்லாம் லாபத்தில் ஓடிக் கொண்டிருக்கின்றன.

திரு. சா. கணேசன் : நம்முடைய நூல்கள் தரத்திலே குறை வாக இல்லாவிட்டாலும் விலையிலே கூடுதலாக இருப்பதாலே பிற தேச ஏற்றுமதிக்கு இடையூறாக இருக்கிறது, ஏற்றுமதி வளராமல் செய்யும்படியாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கருத்து உரைத்தார்கள். ஜப்பானில், பிற தேசங்களில், நூல்கள் தரத்தில் சமமாக இருந்தும், விலையில் இவ்வளவு குறைந்தும், பிற நாடு களுக்கு ஏற்றுமதி செய்து நம் நூலோடு போட்டி போடும் வாய்ப்பு இருக்க, நம் மாநிலத்தில் அல்லது நம் தேசத்தில் மட்டும் நூல் விலை ஏறிக்கொண்டு போவதற்கு, அல்லது ஏற்றமாக இருப்பதற்குக் காரணம் என்ன? அதற்கான காரணத்தைக் கண்டுபிடித்து, பிற தேசங்களோடு போட்டியிடும் நிலையை உண்டாக்க அரசாங்கம் என்ன வழிவகைகளை மேற்கொண்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது பொருளாதாரக் கேள்வி, நிர்வாக சம்பந்தமான கேள்வி அல்ல. இருந்தாலும் எனக்குத் தெரிந்ததைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். பிற நாடுகளிலே அவர்கள் தங்கள் நாட்டிலேயே எல்லா யந்திரங்களை யும் உற்பத்தி செய்கிறார்கள். அந்த யந்திரங்கள் விலை குறைவாக இருக்கின்றன. நம் நாட்டில் ஆரம்பிக்கிற தொழில்கள் பெருவாரி யாக வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் அளவுக்கு யந்திரங்களைப் பொறுத்த வரையில் நிலைமை இருந்துகொண்டிருக் கிறது. அதனால் விலை அதிகமாக ஆகிறது. மூலதனம் அதிகமாகப் போகிறது. இதர உறுப்புகளை எடுத்துக்கொண்டால் இதே விதமாக விலை உயர்ந்து கொண்டு போகிறது. அதனால் ஒரு நாடு மற்றொரு நாட்டுடன் போட்டியிட்டு சாமான்களை விற்கவேண்டு

3rd February 1966]

மென்ற நிலை ஏற்படவேண்டுமானால், தொழில் துறை அந்த நாட்டிலேயே யந்திரங்களை உற்பத்தி செய்யும் அளவுக்கு வளர்ந்தால் தான் முடியும்.

திரு. எம். எஸ். மணி : தமிழ் நாட்டில் தற்சமயம் 3, 4 மில்கள் மூடிக்கிடக்கின்றன. நூலும், துணியும் விற்பனையாகாத காரணத்தினால், அப்பேர்பட்ட நிலைமையிலே புதியதாக ஆலைகளைத் தொடங்கினால், அந்த நூல்களை அல்லது துணிகளை எப்படி விற்பனைக்கு அனுப்ப முடியும், எப்படி சமாளிக்க முடியும் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதுதான் உலகத்தின் இயல்பு. செத்துக்கொண்டிருப்பார்கள் சில பேர், பிறந்துகொண்டிருப்பார்கள் சில பேர். (சிரிப்பு.) நிர்வாகம் சரியாக செய்யாததனால், சீர்கெட்ட நிர்வாகத்தினால், ஆரம்ப காலத்திலிருந்தே அதற்கு வேண்டிய மூலதனம், ரிசர்வ் பண்டு இவைகளை ஏற்படுத்திக்கொள்ளாமல், வந்த லாபத்தை தாங்களே பங்கிட்டுக் கொள்வது, இப்படியெல்லாம் சென்ற காலத்தில் செய்ததன் பலனை எல்லாம் இப்பொழுது சிலர் அனுபவிக்கிறார்கள். பொதுவாக பார்க்கிற பொழுது, பழைய மில்கள்தான் இந்த விதமான கஷ்டத்தில் இருக்கின்றன. புதியதாக ஆரம்பிக்கப்பட்ட மில்களெல்லாம் லாபகரமாக ஓடிக்கொண்டிருக்கின்றன. புதியதாக ஆரம்பிக்கப்பட்ட மில்களில் எந்தத் தேக்கமும் இருப்பதாகக்கூட நிலைமை இல்லை. நவீனமான புதிய தொழிற்சாலைகளை வைத்து, 'ப்ரொடக்ட்விடி' உற்பத்தித் திறனை அதிகமாக்குவதன் மூலம் அபிவிருத்தி காணமுடியும்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : நூல் விலை ஏற்றத்திற்குக் காரணம் பற்றி அமைச்சர் அவர்கள் கூறினார்கள். உயர் ரக நூல்கள் தயாரிப்பதற்கு வெளிநாடுகளிலிருந்து பஞ்சு இறக்குமதி செய்யவேண்டியிருக்கிறது. ஆகவே, இதன் மூலமும் விலை உயர்வு இருந்திருக்கிறது. அதைப்பற்றி விளக்கம் தருவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதுவும் உண்மைதான். 80-லிருந்து 100, 120 கவுண்டு நூல்களுக்கு ஈஜிப்ஷியன் காட்டன் வேண்டியிருக்கிறது. 'ஈஜிப்ஷியன் காட்டன்' என்றால், எகிப்திலிருந்து வருகிற காட்டனுக்கு மாத்திரம் பெயர் இல்லை. அந்த ரகத்திற்குப் பெயர் 'ஈஜிப்ஷியன் காட்டன்' என்று சொல்லுவது, அதாவது நீண்ட இழைப் பருத்தி, 'லாங் ஸ்டேபிள் காட்டன்'. அதை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கு அதிகமாக பணம் செலவாகிறது. அதுவும் ஒரு காரணம்.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, நம்முடைய நூலின் விலை அதிகமாக இருக்கிற காரணத்தினால் வெளி நாட்டு மார்க்கெட்டுகளில் விலை போகவில்லை என்று சொன்னார்கள். தொழிலைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக நம்முடைய நாட்டில் உற்பத்தியாகும் சர்க்கரையை வெளி நாடுகளில் குறைந்த விலைக்கு விற்று நம்முடைய சர்க்கரைத் தொழிலைக் காப்பாற்றுவது போல், நூலையும் வெளி நாடுகளில் குறைவான விலைக்கு விற்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த முறைதான் இப்பொழுது அமலுக்கு கொண்டு வந்திருக்கிறோம். ஏற்றுமதி செய்கிறவர்களுக்கு 'எக்ஸ்போர்ட் இன்ஸென்டிவ்' கொடுத்து, அதை ஈடுகட்டிக் கொள்வதற்கு சர்க்கார் சலுகை காட்டிக் கொண்டு வருகிறார்கள்.

திரு. து. ப. அழகமுத்து : ஒரு குறிப்பிட்ட இடத்தில் மில் ஆரம்பிப்பதற்கு அனுமதி பெற்றவர்கள் வேறு இடத்திற்கு மில்லை மாற்றவேண்டும் என்று விரும்புகிறபொழுது ராஜ்ய சர்க்கார் மூலம் மத்திய சர்க்காரை அணுகுகிறார்களா அல்லது நேரடியாகவே அவர்கள் மத்திய சர்க்காரிடம் வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு அனுமதி கோருகிறார்களா? ராஜ்ய சர்க்கார் மூலம் அனுமதி கோருகிறார்கள் என்றால், முதலில் குறிப்பிட்ட இடத்திலேயே அந்த மில்லை ஆரம்பிக்கவேண்டும் என்பதை ஏன் வலியுத்தக் கூடாது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இரண்டு விதமாகவும் செய்கிறார்கள். மத்திய சர்க்காரிடம் நேரிடையாகவும் கேட்கிறார்கள். ராஜ்ய சர்க்காரை அணுகியும் அனுமதி கேட்கிறார்கள். கூடுமான வரை இடத்தை மாற்றுவதற்கு அனுமதி கொடுப்பதில்லை. மில் வராமல் போய்விடுமோ என்ற நிலைமை இருந்தால், அப்பொழுது வேறு இடத்திற்கு மாற்றினால் வருமா என்று சற்று ஆலோசிப்பது உண்டு.

திரு. ம. கமலநாதன் : சமுத்திர மட்டத்திற்கு 3,000 அடிகளுக்கு மேல் அமைந்துள்ள ஹோசூரில் உள்ள சீதோஷ்ண ஸ்திதியின் நிலைமையில் உயர்ந்த ரக நூல் அங்கு உற்பத்தி செய்யமுடியும் என்று சொல்லப்படுவது உண்மையா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்பொழுது அங்கு மில்லே இல்லை. அதனால் தரத்தைப்பற்றி சொல்ல முடியாது. ஹோசூரில் மில் வைப்பது நன்றாக இருக்கும், அது பொருத்தமாக இருக்கும். அதற்கான முயற்சி எடுத்துக்கொண்டோம். அந்த முயற்சி மீண்டும் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி சி. குழந்தையம்மாள் : நமது நாட்டில் நீண்ட இழைப் பருத்தி நூல் உற்பத்தி செய்யக்கூடிய மில் முதலாளிகள் சம்மேளனம் தீவிர பருத்தி சாகுபடி திட்டத்தை கடந்த இரண்டு ஆண்டுகளாக அதி தீவிரப் படுத்தியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின் மூலம் நமக்கு இருக்கக்கூடிய குறை நிவர்த்தியாகும் என்று அமைச்சர் அவர்கள் நினைக்கிறார்களா அல்லது ஏதாவது அதை மாற்றி அமைப்பது நல்லது என்று கருதுகிறார்களா என்பது பற்றி பதில் சொல்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதனால் நமக்கு இருக்கிற பற்றாக்குறை நிவர்த்தியாகாது, ஓரளவுக்கு சமாளிப்பதற்கு உதவியாக இருக்கும். 'ஸீ ஐலண்டு காட்டன்' என்று சொல்லக்கூடிய ஒரு ரகப் பருத்தியை கேரளாவில் சில பகுதிகளிலும், சில மலைப்

3rd February 1966]

பிராந்தியங்களிலும் போட்டு வைத்திருக்கிறார்கள். அந்த நீண்ட இழைப் பருத்தி வெற்றிகரமாக வந்தால், நம்முடைய பற்றாக் குறையை ஓரளவுக்கு பூர்த்தி செய்துகொள்ள முடியும்.

திரு. ஜே. மாதா கவுடர் : இந்த ரக காட்டன் மலைப் பிராந்தியங்களில் வருகிறது. கேரளத்தில் பயிரிடப்படுகிறது என்று சொன்னார்கள் அமைச்சர் அவர்கள் நமது மாறிலத்தில் மலைப் சொன்னார்கள் அமைச்சர் அவர்கள் நமது மாநிலத்தில் மலைப் இல்லை என்றால் அதற்கான முயற்சி மேற்கொள்ளப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதை மிகவும் உயர்ந்த ஆல்டிட்யூடில், உயர்ந்த சிகரங்களில் பயிர் செய்ய முடியாது. இதைப்பற்றி விவசாய ஆராய்ச்சிகளெல்லாம் இருக்கின்றன. அதை எந்த இடத்தில் நம்முடைய ராஜ்யத்தில் பயிர் செய்ய முடியும் என்பதை விவசாய இலாகா கூட பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. செ. மாதவன் : இந்த நூல் ஆலைக்கு லைசென்ஸ் யார் பேருக்குக் கொடுக்கப்பட்டது ? எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு கொடுக்கப்பட்டது ? இதுவரையில் என்னென்ன முயற்சிகளை அவர்கள் செய்திருக்கிறார்கள் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : திரு. டி. என். எம். அருணாசலத்திற்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டது. 1964-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் கொடுக்கப்பட்டது. நிலம் வாங்கியிருக்கிறார்கள். ரூ. 50,000 மூலதனம் சேர்த்திருக்கிறார்கள்.

'டிராக்டர்' களுக்கு வரி விலக்கு

* 70 **கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விவசாயக் காரியங்களுக்காகப் பயன்படுத்தப்படும் டிராக்டர்களுக்கு மோட்டார் வாகன வரி **(Motor Vehicles Tax)** விலக்கு அளிக்க வேண்டும் என்று கோரி தென்னாற்காடு மாவட்ட விவசாய டிராக்டர் உரிமையாளர்களிடமிருந்து மனு ஏதேனும் அண்மையில் அரசாங்கத்திற்கு வந்ததா ?

(இ) ஆமெனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) Orders have since been issued exempting from payment of motor vehicles tax, tractors and trailers used exclusively for transporting agricultural produce of the owners of the vehicles and for collecting one-third of normal rate of tax when such vehicles are used for transporting agricultural produce of persons other than the owners of the vehicles with effect from 1st January 1966.

SRI C. CHIRANJEEVULU NAIDU : What are the rules framed to distinguish whether it is the property of the owner or private persons?